**செய்தி வெளியீடு எண்: 268** **நாள்:12.06.2021**

**செய்தி வெளியீடு**

44–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டமானது ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சி மூலம் இன்று (12.06.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் கலந்துகொண்டார்கள். நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் அவர்களும் கலந்துகொண்டனர்.

கோவிட் பெருந்தொற்று தொடர்பான மருந்துகள் மற்றும் கருவிகள் மீது ஜி.எஸ்.டி சலுகை/வரிவிலக்கு அளிப்பதற்காக, வரிவிகிதங்களை பரிசீலித்து உரிய பரிந்துரைகள் வழங்கும் நோக்கில் மேகாலயா முதலமைச்சர் தலைமையில் குஜராத், மகாராஷ்டிரம், கோவா, கேரளா, ஒடிசா, தெலுங்கானா மற்றும் உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களை சேர்ந்த உறுப்பினர்கள் கொண்ட அமைச்சர்கள் குழு ஒன்று ஜி.எஸ்.டி மன்றத்தால் அண்மையில் அமைக்கப்பட்டது.

அக்குழு அளித்த அறிக்கையின் மீது விவாதித்து முடிவு எடுப்பதற்காக 44–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டமானது இன்று (12.06.2021) கூட்டப்பட்டது. அமைச்சர்கள்அடங்கிய குழுவின் முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு:–

- தடுப்பூசி மற்றும் மருந்துகள் மீது பூஜ்ய விகிதம் / 0.1 சதவிகிதம் வரி குழுவினால் பரிந்துரைக்கப்படவில்லை.
- டொசிலிஜுமாப் (Tocilizumab) மற்றும் ஆம்போடெரிசின்–பீ (Amphotericin-B) மீது தற்காலிக “வெற்று” (Nil) சதவிகிதம் வரி இக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. ஹெபாரின் (Heparin) மற்றும் ரெம்டெசிவிர் (Remdesivir) மற்றும் கோவிட் சிகிச்சைக்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் மருந்து தொழில்சார் துறையால் பரிந்துரைக்கப்படக்கூடிய மருந்துகள் எதன் மீதான வரியினையும் 12%–லிருந்து 5%–ஆக குறைத்திடவும் பரிந்துரை செய்யப்பட்டது.
- கோவிட் தடுப்பூசிகள் (Covid Vaccines), ஆர்.டி.பி.சி.ஆர் கருவிகள் (RT PCR Machines), ஆர்.என்.ஏ. எக்ஸ்ட்ராக்ஷன் கருவிகள் (RNA Extraction Machines), ஜீனோம் சீக்வென்சிங் கருவிகள் (Genome Sequencing Machines), ஜீனோம் சீக்வென்சிங் கிட்ஸ் (Genome Sequencing Kits), கோவிட் சோதனை செய்யும் கருவிகளுக்கான மூலப்பொருட்கள், பீ.பீ.ஈ கிட்ஸ் (PPE Kits),

என் 95 (N95), மூன்று அடுக்கு அறுவை சிகிச்சை முகக் கவசங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் போர்ட்டபிள் மருத்துவமனை யூனிட்ஸ் (Portable Hospital Units) ஆகியவை மீது வரிவிகிதம் குறைப்பதற்கு இக்குழு பரிந்துரை ஏதும் செய்யவில்லை.

- 31.08.2021 முடிய 28% / 18% / 12% வரிவிகிதத்திற்குட்படும் கோவிட் தொடர்பான மருந்துகள் மற்றும் அவை தொடர்பான சில பொருட்கள் மீது 12% / 5% வரிவிகிதமாக குறைக்க இக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண். | விவரம் | தற்போதைய ஜி.எஸ்.டி வரிவிகிதம் | அமைச்சர்கள் குழு பரிந்துரைத்துள்ள வரிவிகிதம் |
|---|---|---|---|
| 1 | வெண்டிலேட்டர்கள் (Ventilators) | 12% | 5% |
| 2 | (டி—டைமர், ஐ.எல்.6, பெரிடின் மற்றும் எல்.டி.எச். போன்ற குறிப்பிட்ட இன்பிலேமேடரி பரிசோதனைக்கான கருவிகள் (Specified inflammatory diagnostic kits,namely D-Dimer,IL-6, Ferritin and LDH) | 12% | 5% |
| 3 | கை சுத்திகரிப்பான்கள் (Hand Sanitizers) | 18% | 5% |
| 4 | உடல் வெப்பம் சோதனை செய்வதற்கான கருவிகள் (Temperature Check Equipment) | 18% | 12% |
| 5 | பல்ஸ் ஆக்ஸிமீட்டர் (Pulse Oximeters) | 12% | 5% |
| 6 | எரி வாயு/மின்சாரம்/இதர வகையான தகன உலை (Gas/Electric/other Furnaces for crematorium) | 18% | 12% |
| 7 | கோவிட் பரிசோதனை கருவிகள் (Covid Testing Kits) | 12% | 5% |
| 8 | ஹை ஃப்லோ நேசல் கனுலா கருவி (High flow nasal canula device) | 12% | 5% |
| 9 | பைபாப் இயந்திரம் (BiPAP Machine) | 12% | 5% |
| 10 | வெண்டிலேட்டர்கள் மாஸ்க்/கனுலா/ஹெல்மட்(Ventilator masks/canula/helmet) | 12% | 5% |
| 11 | மருத்துவதர ஆக்ஸிஜன் (Medical Grade Oxygen) | 12% | 5% |
| 12 | ஆக்ஸிஜன் கான்ஸன்ட்ரேடார்/ ஜெனரேடார் (Oxygen Concentrator /Generator) | 12% | 5% |

இன்றைய கூட்டத்தில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இப்பொருள் குறித்து தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை எடுத்துரைத்தார். கோவிட் பெருந்தொற்று தொடர்பான மருந்துகள் மற்றும் கருவிகள் மீது குறிப்பிட்ட காலத்திற்கு பூஜ்ய விகித (Zero rate) வரி தான் நிர்ணயிக்க வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும், இந்நேர்வில் அமைச்சர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரை ஏற்புடையதாக இல்லை என்றும் இவற்றின் மீது பூஜ்ய விகிதம் அல்லது 0.1 சதவிகிதம் வரி தான் விதித்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்கள். மேலும் கோவிட் சிகிச்சை தொடர்பான பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரி விகிதத்தினை முடிவு செய்யும் நேர்வினை கருணையுடன் அணுகவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மேலும், இன்றைய கூட்டத்தில் பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில் உடல் வெப்பம் சோதனை செய்வதற்கான கருவிகள் மீதான வரியினை 18%–லிருந்து 5%–ஆகவும், ஆம்புலன்ஸ் மீதான வரியினை 28%–லிருந்து 12%–ஆகவும் மற்றும் எரி வாயு/மின்சாரம்/இதர வகையான தகன உலை மீதான வரியினை 18%–லிருந்து 5%–ஆகவும் குறைப்பதென மன்றத்தால் முடிவு செய்யப்பட்டது. இந்த வரி குறைப்பு/வரி விலக்கானது 30.9.2021 வரை வழங்கப்பட்டுள்ளது.

**அரசுச் செயலாளர்**

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**